BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# தோடர்களின் இறை நம்பிக்கை

முனைவர் பொ. ராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர். மின்னஞ்சல்: rani_tam@avinuty.ac.in ORCID : https://orcid.org/0000-0002-1559-6674

**ஆய்வுச் சுருக்கம்**

நீலகிரி வாழ் பழங்குடியின மக்களில் ஒரு பிரிவினரான தோடர்களின் சமய வழிபாட்டிலும் சடங்குகளிலும் எருமைகள் முதலிடம் பெறுகின்றன. தோடர்களின் இறை நம்பிக்கையில் இயற்கை, மலை, நீர்நிலைகள், புனித இடங்கள் மற்றும் குறிப்பாக எருமை ஆகியவை தெய்வீகத் தன்மை பெற்றதாகக் கருதப்படுகின்றன. எருமையை அவர்கள் ஒரு சாதாரண கால்நடையாக அல்லாமல், தெய்வ அருளின் அடையாளமாகவும், குலத்தின் புனிதச் செல்வமாகவும் போற்றுகின்றனர். தோடர்களின் எருமைகள், அவற்றின் வகைகள், பெயர்வைத்தல், பட்டிகளை அமைக்கும் முறை, உணவுமுறை, சமயவழிபாட்டிலும், சடங்குகளிலும் எருமைகளின் பயன்பாடு, எருமைகளுக்கென கொண்டாடப்படும் விழாக்கள் போன்ற செய்திகள் இவ்வாய்வுக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

**திறவுச்சொற்கள்:** தோடர்களின் எருமைகள், அவற்றின் வகைகள், பெயர்வைத்தல், பட்டிகளை அமைக்கும் முறை, உணவுமுறை, சடங்குகள்.

## முன்னுரை

தமிழ்நாட்டின் நீலகிரி மலைப்பகுதியில் வாழும் பழங்குடி இனங்களில் தோடர்கள் தனித்துவமான பண்பாடு, வாழ்க்கை முறை மற்றும் சமய மரபுகளைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இயற்கையோடு இணைந்து வாழும் இவர்களின் இறை நம்பிக்கைகள், சுற்றுச்சூழல் மற்றும் கால்நடைகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளன. குறிப்பாக எருமையைப் புனிதமான உயிரினமாகக் கருதி, அதனைத் தெய்வீகத்துடன் தொடர்புபடுத்தி வழிபடும் மரபு இவர்களின் சமய வாழ்வின் முக்கிய அம்சமாகும். வழிபாட்டுச் சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் அன்றாட வாழ்வியல் நடைமுறைகள் அனைத்தும் அவர்களின் ஆழமான இறை நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. தோடர்களின் சமயமும் இறை நம்பிக்கையும் அவர்களின் பண்பாட்டு அடையாளத்தையும் சமூக வாழ்வியலையும் புரிந்துகொள்வதற்கான முக்கியமான கூறுகளாக அமைகின்றதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தோடர்க ளின் வாழ்விடம்

தோடர்கள் தொன்மையான ஆயர்குடி மரபைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கால்நடை வளர்ப்பு, குறிப்பாக எருமை வளர்ப்பு, இவர்களின் வாழ்வியலில் முக்கிய இடம் பெறுகிறது. இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளும் இவர்கள், தங்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு குடியிருப்புகளையும் வாழ்வியல் முறைகளையும் அமைத்துக் கொண்டுள்ளனர். எளிமை, இயற்கை நேயம், கால்நடைப் பேணுதல், தனித்துவமான சடங்குகள் மற்றும் பாரம்பரியப் பண்பாடு ஆகியவை தோடர்களின் வாழ்வியலின் சிறப்புகளாகும். நில அமைப்பிற்கேற்பவும், தம் தொழில் மற்றும் வாழ்முறைச் சார்ந்து தத்தம் வாழிடத்தினைத் தகவமைத்துக் கொண்ட நீலகிரி மாவட்ட மக்களுள் மலையின் உச்சியில் தோடர்கள் வாழ்கின்றனர்.

உலகிலேயே 5500 அடிகள் உயர மலைப்பகுதியில் சைவ உணவை உண்டுவாழும் ஆயர்குடி தொதவர்கள் மட்டுமே (பக்தவச்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப – 141).

-



தோடர்களின் கோவில் மற்றும் வீடமைப்பு

**எருமைகளின் வகைகள்**

தோடர்கள் வளர்க்கும் எருமைகள், நீலகிரி மலைப்பகுதிக்கே உரிய தனித்துவமான இனத்தைச் சேர்ந்தவை ஆகும். இவை மலைப்பகுதியின் குளிர்ச்சியான காலநிலைக்கு ஏற்றவாறு தகவமைந்து வாழ்கின்றன. அதிக கொழுப்புச் சத்து கொண்ட பாலைத் தரும் இவ்வெருமைகள், தோடர் சமூகத்தின் புனிதச் செல்வமாகக் கருதப்படுகின்றன. தோடர்கள் தங்களது எருமைகளைப் புனிதத்தன்மை வாய்ந்தவை என்றும், சாதாரண எருமைகள் என்றும் இருவகையாகப் பிரிக்கின்றனர். சாதாரண எருமைகளை வீட்டுத் தேவைக்குப் பயன்படும் பால், மோர் ஆகியவற்றை எடுத்துக் கொள்வதற்குப் பயன்படுத்துகின்றனர். சிறுவர்களும் ஆண்களும் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்கின்றனர். புனித எருமைகள் கோயிலுக்குச் சொந்தமானவை. கோயில்களுக்குப் பயன்படும் புனித காரியங்களுக்கும், இறைப் பணிக்காகவும் இதன் பாலை பயன்படுத்துகின்றனர். இந்த எருமைகளைக் கோயில் பூசாரிகளே மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லவேண்டும். இந்தப் புனித எருமைகளுக்கென ஒவ்வொரு மந்திலும் தனித்தனிக் கொட்டில்கள் உள்ளன.

**எருமைகளுக்குப் பெயர் வைத்தல்**

எருமைகளுக்குப் பெயர் வைத்தல் என்பது அவற்றுடன் எளிதாகப் பழகுவதற்கும், அவற்றைப் பாசத்துடன் அழைப்பதற்கும் உதவுகிறது. கிராமப்புறங்களில் எருமைகளின் நிறம், குணம் மற்றும் தோற்றத்தை வைத்துப் பெயரிடுவது வழக்கமாகக் கொண்டுள்ளனர். தோடர்கள் ஒவ்வொரு எருமைக்கும் தனித்தனி பெயர்களை வழங்குகின்றனர். அவற்றின் நிறம், கொம்பின் அமைப்பு, பிறந்த இடம், உடல் அமைப்பு, குணநலன் அல்லது மரபு ஆகியவற்றின் அடிப்படையில் பெயர்கள் சூட்டப்படுகின்றன. எருமைகளை குடும்ப உறுப்பினர்களைப் போல அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகிறது. கோயில் எருமைகளை ‘கார்தூம்’, ‘நேராஃப்’, ‘கோர்த்’, என்றும், வீட்டு எருமைகளை ‘கேமோர்~;’, ‘நேராப்’, ‘புக்கீர்~;’ என்றும் அழைக்கின்றனர்.

**எருமைகளின் பட்டி அமைப்பு**

எருமைகள் தங்கும் இடம் "பட்டி" என அழைக்கப்படுகிறது. பட்டிகள் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற இடங்களில் அமைக்கப்படுகின்றன. கல், மரம், மூங்கில் மற்றும் புல் போன்ற இயற்கைப் பொருட்களைக் கொண்டு அவை கட்டப்படுகின்றன. காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு, மழை மற்றும் குளிரிலிருந்து காப்பு, மேய்ச்சல் நிலங்களுக்கு அருகாமை ஆகிய அம்சங்கள் கருத்தில் கொண்டு பட்டிகள் அமைக்கப்படுகின்றன.

தோடர்கள் வாழும் எல்லா மந்திலும் எருமைகளுக்கெனத் தனியிடம் இருப்பதைக் காணமுடிகிறது. இந்தப் பட்டிகள் வட்டவடிவமான குளம் போன்று இருக்கின்றன. இப்பட்டியானது 15 அடி அகலமும், 6 அடி உயரமும் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் வாயில்கள் 4 அடி அகலத்தில் உள்ளன. அதன் கதவுகள் மூங்கில் மரத்தால் செய்யப்பட்டுள்ளன. இவ்வட்டவடிவமான பட்டிகளின் சுவர்கள் கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. அதன் தரைகள் மண்தரைகளாக அமைந்துள்ளன. தோடர்களின் வீட்டின் அமைப்பும், எருமைகளின் பட்டி அமைப்பும் வட்ட வடிவமாக இருந்துள்ளன. தற்போது தோடர்களின் வீடுகள் வளைந்து சற்று மேல்நோக்கி அமைக்கப்பட்டுள்ளன.

**திருமணத்தின் போது சீதனம் வழங்குதல்**

திருமணத்தின் போது பெண்ணுக்குச் சீதனமாக எருமைகளையும், வெண்கலத்தட்டு ஒன்றையும் வழங்குகின்றனர். ஒரு தோடா குடும்பத்தினர் தன் மகளுக்கு வசதிக்கேற்றாற் போல ஐந்தும் அதற்கு மேலும் எருமைகளை சீதனமாக வழங்குகின்றனர். அவற்றைக்கொண்டு அவர்களின் செல்வநிலையை அறிந்து கொள்ளமுடிகிறது. தற்போது இவற்றுடன் நகைகளையும் பொருட்களையும் சீதனமாகக் கொடுக்கின்ற நிலை வழக்கத்திற்கு வந்துள்ளது.

**இறப்பின் போது பலியிடல்**

தோடர்களின் இறப்புச் சடங்குகளில் எருமைகளைப் பலியிடுவது என்பது முக்கியமான நிகழ்வாகும். ஆண்கள் இறந்தால் புனித எருமைகளையும், பெண்கள் இறந்தால் சாதாரண எருமைகளையும் பலியிடுவது இவர்களின் வழக்கமாகும். இறந்தவர்கள் செல்வந்தர்களாக இருப்பின் ஒரு எருமை மந்தையையே பலியிடுவர் என்று கூறுகின்றனர்.

**பால்பண்ணை அமைத்தல்**

தோடர்கள் எருமை மந்தைகளை மேய்த்து வாழும் பழங்குடி மக்களாதலால் அவர்களது சமயம் பால் மற்றும் பால் பண்ணைகளுடனும், எருமைகளுடனும் தொடர்புடையதாக இருக்கின்றது. தோடர்களின் பால்பண்ணை என்பது கோயில்களைக் குறிக்கும். சில மந்துகளில் இரண்டு வகை கோயில்கள் உண்டு. அவற்றினை 'எதுாட்பொளி' (பெரிய கோயில்) 'கிட்பொளி' (சிறிய கோவில்) என்று அழைக்கின்றனர்.

**எருமைகளுக்கு உப்புக் கொடுத்தல்**

தோடர்கள் தங்களது எருமைகளுக்கு உப்புக் கொடுப்பதைச் சிறப்பாக 'உப்புப்பண்டிகை' என்று கொண்டாடுகின்றனர். வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை உப்புப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. சின்னதாக ஒரு குழி வெட்டி அதில் உப்பும் தண்ணீரும் கலந்து நிரப்புவார்கள். அதன் பின்பு எருமைகளை ஓட்டிவந்து அதனைக் குடிக்கச் செய்வர். பின்பு ஆண்கள் கோயிலுக்குச் சென்று வழிபடுவர். பெண்கள் கோயிலுக்குத் தூரத்தில் நின்று வழிபடுவர்.



தோடர்களின் குடியிருப்பான மந்து

உப்புக் கொடுக்கின்ற சடங்கின்போது மண்ணினால் செய்த ஒரு பானையையும், ஒரு கூடையில் உப்பையும் உப்புக் கொடுக்கும் இடத்திற்கு கொண்டு வருவார்கள். இந்த இடம் பெரும்பாலும் பால்பண்ணைக்கு அருகிலேயே இருக்கும். இவ்வுப்புக் குழிகள் 80 சென்டிமீட்டர் அகலமும், 20 சென்டிமீட்டர் ஆழமும் கொண்டதாக இருக்கும். இக்குழியில் உப்பும் தண்ணீரும் கொட்டுவர். இதனை 'உப்பின்குடி' என்று அழைக்கின்றனர். வருடத்திற்கு இருமுறை என இரண்டு காலங்களில் கொடுக்கப்படும். உப்புகளை 'பனிஉப்பு', 'கார்உப்பு' என்னும் பெயர்களில் குறிப்பிடுகின்றனர். இந்த உப்புகளைக் கொடுக்கும்போது எருமைகள் நோயிலிருந்தும், மற்ற தீயசக்திகளிலிருந்தும் விடுபடுவதாகக் கூறுகின்றனர்.

**கோயில் திருவிழாவின் போது எருமைகளுக்குச் செய்யும் சடங்குகள்**

எருமைகளுக்கு செய்யப்படும் சடங்குகள் மற்றும் நேர்த்திக்கடன்கள் கிராம மக்களின் விவசாய மேம்பாட்டிற்காகவும், தீய சக்திகளிடம் இருந்து ஊரைக் காப்பதற்காகவும் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மந்திலிருக்கும் ஒரு கோயில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. அதனையே கோயில் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். தலைமை மந்தாகக் கருதப்படும் முத்தநாடு மந்தில் மட்டும் ஆண்டுக்கொரு முறை விழாக் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவின் அன்று காலையில் மேய்ச்சலுக்குச் சென்று திரும்பும் எருமைகளைச் சுத்தப்படுத்தி அதனைப் பட்டியில்

அடைப்பர். பின் பால்கறந்து பால்கறந்த இடத்திற்குச் சற்று அருகில் அந்தந்த மந்தில் இருக்கும் தெய்வத்தை நினைத்து மூன்று முறை கீழே ஊற்றுவர். அத்துடன் அன்றைய கோயில் திருவிழா நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. கோயில் திருவிழாவின் இறுதிச் சடங்காக இதனைக் குறிப்பிடுகின்றனர்.

**தோடமொழி கலைச்சொற்கள்**

1. எருகுப்பீத் (எருமை மேய்த்தல்) 2. கார்தூம், கோர்த் (கோயில் எருமை) 3. கேமோர்ஸ் (சாதாரண எருமை) 4. கோணங்கா (ஆண் எருமை) 5. கோணங்கி (பெண் எருமை) 6. கோணா (கன்றுக்குட்டி) 7. துவோ (பட்டி) 8. வீடு (ஆர்ஸ்)

**முடிவுரை**

தோடர்களின் வாழ்க்கை, சமயம் மற்றும் பண்பாட்டில் எருமை பிரிக்க முடியாத இடத்தை வகிக்கிறது. எருமை என்பது ஒரு கால்நடை மட்டுமல்ல; அது அவர்களின் தெய்வ நம்பிக்கை, பொருளாதார வளம், சமூக அடையாளம் மற்றும் பண்பாட்டு மரபின் சின்னமாகும். எனவே, தோடர்களின் எருமை வளர்ப்பு மரபுகளையும், அதனுடன் இணைந்துள்ள சமய மற்றும் சடங்கு நடைமுறைகளையும் ஆய்வு செய்வது, அவர்களின் முழுமையான வாழ்வியலைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானதாகும். எருமைகளைக் கடவுளாகவும், தங்களில் ஒருவராகவும் நினைத்து வாழ்கின்ற வாழ்க்கை அமைப்பைத் தோடர்கள் கொண்டிருக்கின்றனர் என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.

**தொகுப்புரை**

தோடர்களின் வாழ்வியல், நீலகிரி மலைப்பகுதியில் வளர்க்கப்படும் மலை எருமைகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அவர்களின் பொருளாதாரம், சமூக அமைப்பு, சமய நம்பிக்கைகள் மற்றும் பண்பாட்டு மரபுகள் அனைத்தும் எருமையுடன் நெருங்கிய தொடர்புடையவையாகும். எருமையை வெறும் கால்நடையாகக் கருதாமல், தெய்வீகத் தன்மை கொண்ட உயிரினமாகவும், தங்கள் சமூகத்தின் ஓர் அங்கமாகவும் மதித்து வாழும் தனித்துவமான பண்பாட்டை தோடர்கள் கொண்டுள்ளனர். எருமையை மையமாகக் கொண்ட வழிபாட்டு முறைகள், சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் அன்றாட வாழ்வியல் நடைமுறைகள், மனிதன்–கால்நடை உறவின் ஆழத்தையும் இயற்கையுடனான இணக்கமான வாழ்வியல் சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றன.

**துணைநூற் பட்டியல்**


1. அமல அருள் அரசி, அ., பழந்தமிழர் வாழ்வும் வரலாறும், செம்மூதாய் பதிப்பகம், சென்னை, 2016
2. சுனில்ஜோகி, முனைவர் கோ., நீலகிரி படகரின மக்களின் மரபுசார் பண்பாட்டுப் புழங்குபொருட்கள், முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம், 2015
3. தோடர் நாட்டுப்புற பாடல்கள் மற்றும் கதைகள், சாஹித்ய அகடெமி பப்ளிகேஷன்ஸ் பதிப்பகம், புதுதில்லி, 2015
4. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2018


**தகவலாளர் பட்டியல்**

| பெயர் | வயது | ஊர் |
|---|---|---|
| 1. கென்னா | 37 | பாகல்கோடு மந்து |
| 2. மொனேகர் | 48 | பாகல்கோடு மந்து |
| 3. சின்மடி | 36 | பாகல்கோடு மந்து |
| 4. ரங்கன் | 28 | பாகல்கோடு மந்து |
| 5. சேஜி | 30 | பாகல்கோடு மந்து |